இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 263 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 21 – ஞாயிற்றுக்கிழமை 04 மே 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 263 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 21 - Sunday 04 May 2025 - Dak 12 Pages ₹ 5.00

## பழி வாங்கும் பா.ஜ.க. அரசை அரசியல் ரீதியாக எதிர்கொள்வோம்!

# மதுரையில் ஜூன் 1-ல் தி.மு.க. பொதுக் குழு கூடுகிறது!

## மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, மே 4 -**

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நேற்று அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் "மதுரையில் ஜூன் 1-ல் கழகப் பொதுக்குழுவைக் கூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளதாக" தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

### தீர்மானம் : 1

**திராவிட மாடல் அரசின் ஐந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் - மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற - இந்தியாவிற்கே ரோல் மாடலாகச் செயல்படும் கழகத் தலைவர் மற்றும் முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு.**

இந்தியத் துணைக் கண்டத்தில் - மக்கள் நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சாதிகாரப் போக்கிலிருந்து - அரசியல் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து - ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் - மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்சராகவும் - இந்தியாவிற்கே ரோல் மாடலாக - தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தனது மனமுவந்து வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி - ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் தொடர்ந்து குரல் எழுப்பி - சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசுக்குத்தான் உள்ளது என்பதை நாட்டு மக்களுக்கும் - ஒன்றிய அரசுக்கும் உணர்த்தி - தற்போது சாதிவாரிக் கணக்கெடுப்பு அறிவிப்பைப் பெற்றிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அரசியல் சட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாக ஆளுநரின் கையெழுத்தின்றி உச்சநீதிமன்றமே ஒப்புதல் அளித்துச் சட்டமியற்றும் அதிகாரத்தைத் தனது சட்டப் போராட்டம் மூலம் பெற்று, ஆளுநர் அடாவடியாக நிறைவேற்ற மறுத்த பத்து மசோதாக்களைச் சட்டமாக்கி சகாப்தம் படைத்து, "சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திற்கே" - "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கே - நிச்சயமாக ஆளுநருக்கு இல்லை" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பெற்று, தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியது மட்டுமின்றி, இந்தத் தீர்ப்பின் மூலம், இந்தியக் கூட்டாட்சி வரலாற்றில் அனைத்து மாநிலங்களுக்குமான உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்.




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (3.5.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், திருச்சி சிவா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக மாவட்டச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

அதோடு, வரலாற்றில் மீண்டும் மாநில சுயாட்சிக்காக மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர் குரியன் ஜோசப் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவினை நியமித்துள்ள கழகத் தலைவரும் - முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்டச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் உவகையுடனும் - பெருமை பொங்கவும் பாராட்டுதலைப் பதிவு செய்து கொள்கிறது.

மேலும், ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் நாயகர் முதலமைச்சர் அவர்களுக்குத் துணையாகச் செயலாற்றி வரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்; அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் இம்மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் வாழ்த்தும் - பாராட்டும் - நன்றியும் தெரிவித்துக் கொள்கிறது.

### இந்தியாவிற்கே ரோல் மாடல் முதல்வர்!

**நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து - ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் - மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்சராகவும் - இந்தியாவிற்கே ரோல் மாடலாக - தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தனது மனமுவந்து வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.**



### தீர்மானம் : 2

**"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்**

முதலமைச்சர் அவர்கள், நடைபெற்று முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில், அவரது உள்துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில் தெரிவித்தபடி, வளர்ச்சி சார்ந்த எந்த ஓர் இலக்காக இருந்தாலும் அதில் இந்திய ஒன்றியத்தின் சராசரியைவிட தமிழ்நாடு கூடுதலான அளவில் முன்னேறியிருக்கிறது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 விழுக்காடு என்றால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடு; தேசிய சராசரியான 2.06 லட்சம் என்பதை விட தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 3.58 லட்சம் என 1.74 மடங்கு அதிகரிப்பு; தமிழ்நாட்டின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 47 விழுக்காடு; நிலையான வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடம்; சமூக முன்னேற்றக் குறியீட்டில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம்; வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் வெறும் 1.43 விழுக்காடாகக் குறைவு; 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டம் மூலம் 2.25 கோடி மக்கள் பயன்; இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அரசு மருத்துமனைகளில் அதிகமான படுக்கைகள்; இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகள் கொண்ட மாநிலம்; 5.35 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளைப் பெற்றதில் நாட்டிலேயே இரண்டாவது இடம்; ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதில் நாட்டிலேயே மூன்றாவது இடம்; சூரிய சக்தியில் நான்காவது இடம், ஸ்டார்ட்-அப் தரவரிசைப் பட்டியலில் அ.தி.மு.க. ஆட்சியில் கடைசி இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2022-இல் முதலிடம், ஏற்றுமதித் தயார் நிலைக் குறியீட்டில் முதலிடம்; மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதன்மை மாநிலம்; தோல் பொருட்கள் மற்றும் ஜவுளி ஏற்றுமதியில் முதன்மை மாநிலம்; நாட்டிலேயே காவல்துறையில் அதிக பெண் அதிகாரிகள் பணிபுரியும் மாநிலம்; அதுமட்டுமல்ல - சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருப்பதில் நாட்டிலேயே முதல் இடத்தில் உள்ள மாநிலம் தமிழ்நாடு என்று திராவிட மாடல் அரசின் மணிமகுடத்தை அலங்கரிக்கும் அடுக்கடுக்கான சாதனைகளால் தமிழ்நாடு இன்றைக்கு முன்னிலையில் இருக்கிறது!

அதுமட்டுமல்ல, மக்களை முன்னேற்றும் முத்திரைத் திட்டங்களான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்', 'மகளிர் விடியல் பயணத் திட்டம்', 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்', 'புதுமைப் பெண் திட்டம்', 'தமிழ்ப் புதல்வன் திட்டம்', 'நான் முதல்வன் திட்டம்', 'அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்', 'இல்லம் தேடிக் கல்வி', 'மக்களைத் தேடி மருத்துவம்' என அனைத்துத் திட்டங்களும் - தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும் - தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும் முன்னோடியாகத் திகழ்வதை மற்ற மாநிலங்கள் கூட இன்று திரும்பிப் பார்க்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழக அரசின் இந்தச் சாதனைகளைப் பகுதி, ஒன்றிய, நகர அளவில், இளைஞர் அணியின் மூலம் வரப்பெற்ற 186 இளம் பேச்சாளர்கள் உள்ளிட்ட 443 பேச்சாளர்களின் பங்கேற்புடன், 868 ஒன்றியங்கள் - 224 பகுதிகள் - 152 நகரங்கள் என மொத்தம் 1,244 இடங்களில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்களை நடத்திடுவதென மாவட்டக் கழகச் செயலாளர்களின் இந்தக் கூட்டம் முடிவு செய்கிறது.

### தீர்மானம் : 3

**பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு - கழகத் தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் கூடல் மாநகரில் ஜூன் 1-ஆம் நாள் கூடுகிறது!**

நூறாண்டு கடந்த திராவிட இயக்கத்தில், 75 ஆண்டுகளைக் கடந்து தமிழ் மக்களுக்கான சமுதாய - அரசியல் பணிகளைச் சளைக்காமல் மேற்கொண்டு, நாட்டின் அரசியலில் தவிர்க்க முடியாத தேசிய சக்தியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில் நின்று தமிழ்நாட்டின் நலன் காத்து வருவதுடன் - இன்று அகில இந்திய அரசியலில் நம் கழகத் தலைவரின் கருத்து என்ன என்ற எதிர்பார்ப்பு ஓங்கி நிற்கிறது.

பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்களை நிறைவேற்றி - தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## 1244 இடங்களில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள்!